**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**

அ.வ.எண்.176/2025 வா.சா.1 அருளானந்தம்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 17.02.2026

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் என் மகனின் வாரிசு சான்று கோரி தாக்கல் செய்து உள்ளேன். என் மகன் பாபுவிற்கு ஏற்கனவே திருமணம் ஆகி விவாகரத்து ஆகியதாக கூறியுள்ள சங்கதி பற்றி பிரதிவாதிகளுக்கு ஏதும் தெரியாது என்றால் சரியல்ல. நான் எந்த சமயத்தை சார்ந்தவர் என்றால் நான் பிறப்பால் இந்து சமயத்தை சார்ந்தவன். என் ஆவணங்களிலும் அவ்வாறே உள்ளது ஆனால் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு கிருஸ்துவ சமயத்திற்கு எங்கள் குடும்பமே மாறிவிட்டோம். என் மகன் எந்த சமயத்தை சார்ந்தவர் என்றால் அவர் கிருஸ்துவர் தான் ஆனால் அவரது ஆவணங்களில் இந்து சமயத்தை சேர்ந்தவராக உள்ளது.

**( வாதி தரப்பில் இறந்தவர் மற்றும் வாதிகள் சமயம் குறித்து உரிய திருத்தங்கள் செய்ய அனுமதி கோரியதன் பெயரில் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

| |
|---|
| இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

**ஒப்பம்/-(மு.ச. ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி